*KALAM – International Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*14(2), 2021*

# கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பழமொழிகளில் அறபு மொழிச் செல்வாக்கு: "இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள்" நூலை துணையாகக் கொண்ட ஆய்வு

**தாலிப் எம்.**
*சிரேஷ்ட விரிவுரையாளர், அறபுத்துறை, கலை கலாசார பீடம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை*

Corespondence: thalibm@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கை முஸ்லிம் சமூகம் தனித்துவமான பழமொழி இலக்கியத்தை கொண்டிருக்கின்றனர். ஏனைய முஸ்லிம் இலக்கிய வடிவங்களைப் போலவே, முஸ்லிம்களின் பழமொழிகளும் அறபு மொழி செல்வாக்குப் பெற்றுள்ளன, இவ்விடயம் இன்றைய இலங்கைச் சூழலில் முக்கிமானதொரு பேசுபொருளாக மாறியுள்ளது. இலங்கையின் அரசியல் மற்றும் சமூக வெளியில் அறபு மொழி தொடர்பிலும், முஸ்லிம்களின் சமய, கல்வி, கலை கலாசார அம்சங்களில் அதன் பின்புலம் தென்படுகின்றமையும் ஏனைய சமூகத்தாரிடையே பல்வேறு வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாய்வு, இலங்கை முஸ்லிம்களின் மொழி வழக்கில் அறபு மொழி செல்வாக்குச் செலுத்த ஏதுவாகிய காரணிகளை கண்டறிந்து, முஸ்லிம்களின் பழமொழிகளில் காணப்படும் அறபு மொழிச் சொற்களை வெளிப்படுத்தி, அதன் கருத்துக்களை இஸ்லாமிய, அறபு இலக்கிய மூலாதாரங்களுடன் ஒப்பிட்டு நோக்குவதை இலக்காகக் கொண்டுள்ளது. இதற்காக விவரண மற்றும் பகுப்பாய்வியல் முறைகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வுக்காக கவிஞர் எஸ். முத்துமீரானின் "இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள்" எனும் நூலிலிருந்து, ஆய்வாளரினால் அட்டவணைப் படுத்தப்பட்ட முப்பது பழமொழிகளில், எளிய எழுமாற்று மாதிரியெடுப்பு முறையைப் பயன்படுத்தி 05 பழமொழிகளை ஆய்வுக்காக எடுத்து, அறபு இலக்கிய மூலாதாரங்களில் குறித்த சொற்கள் பயன்படுத்தியுள்ள பாங்கினை ஆய்வாளர் ஒப்பிட்டு விளக்குகின்றார். இவற்றை, தமிழில் பாவனையில் உள்ள அறபுச் சொற்கள், தமிழுக்கு மொழிபெயர்க்க முடியாத சொற்கள், தமிழுக்கு மொழிபெயர்க்கத்தக்க சொற்கள், மறைமுகக் கருத்தில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் என வகைப்படுத்தலாம். அத்துடன், சில பழமொழிகளில் இரு அறபுச் சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**முதன்மைச் சொற்கள்:** அறபு மொழி, முத்துமீரான், பழமொழிகள், செல்வாக்கு, கிழக்கிலங்கை

## 1. அறிமுகம்

### 1.1 பழமொழியும், முஸ்லிம்களும்

இலக்கியக் கூறுகளில் ஒன்றான பழமொழிகள் வெகுசன இலக்கியத்தின் செல்வாக்குமிகு வடிவமாகும். எந்தவொரு கலாசாரத்தைப் பின்பற்றும் மக்களிடமும் இவை பேச்சுவழக்கில் புலப்படும். மக்களின் வாழ்வுமுறை, சிந்தனை, வழக்காறுகள் மற்றும் எண்ணங்களை பிரதிபலிப்பனவாக அவை விளங்கும்.

மானிடரின் அன்றாட வாழ்வியலோடு இணைந்து பிணைந்துள்ள பழமொழிகள், அவர்களின் அனுபவ முதிர்ச்சியின் வெளிப்பாடாகும். மானிடர் வாழ்வெனும் ஆழ்கடலின் நீரோட்டத்தில், இடையிடையே மொழியின் ஒளியில் மின்னிக் கொண்டிருக்கும் முதுசமான முத்துப் பவளங்கதே பழமொழிகள். ஒரு விடயத்தை சுருக்கமாகவும் உயிர்த்துடிப்போடும் விளக்கி வைக்கும் பண்புகளும், உத்திகளும் பழமொழிகளில் நிறையவே உள்ளன. கள்ளம் கபடமற்ற, படிப்பு வாசனையற்ற பாமர மக்கள் தங்கள் அனுபவத்தால் உணர்ந்தளித்த உண்மைகளே பழமொழிகள் என்றும் கூற முடியும்.

முஸ்லிம்கள் தனித்துவமான பழக்கவழக்கங்களையும், பாரம்பரியமான பண்பாட்டு ஒழுக்க நெறிகளையும், கலாசாரங்களையும் கொண்டவர்கள். இவர்களின் வாழ்வியல் முழுக்க முழுக்க ஒழுக்கவியலின்பாற் பட்டது. ஆகையால் இயல்பாகவே சமய ரீதியான செல்வாக்கு இவர்களின் இலக்கியத்தில் பரந்துபட்டுக் காணப்படும். அறபு மொழியைப் பொறுத்தவரையில், முஸ்லிம்களின் வாழ்வியல் விடயதானங்களில் விடுபடமுடியாத அம்சமாகும். கவிஞர் எஸ்.முத்துமீரான் எடுத்துக் காட்டியுள்ள முஸ்லிம்களின் பழமொழிகளில் பெரும்பாலும் ஆன்மீக கருத்தியல்கள் தொனிக்கும் பாங்கு பிரதானமானது. எடுத்துக்காட்டாக முஸ்லிம்கள் தமது எல்லாம் வல்ல ஏக இறைவனை அல்லாஹ் என்றே அறபு மொழியில் அழைப்பார்கள் இதனை கீழ்வரும் பழமொழிகளில் தெளிவாக நோக்கலாம்.

1) தொழுகிறன் அல்லாஹ்வுக்காக, வைக்கோல் களவெடுக்கன் மாட்டுக்காக.

2) அல்லாஹ்ட சிர்ற அவன் தான் அறிவான்

3) அலியார்ர சிர்ற அல்லாஹ் தான் அறிவான்

4) ஆர ஏமாத்தினாலும் அல்லாஹ்வ ஏமாத்த ஏலா

5) அன்பில்லாதவன்ட ஊட்ட அல்லாஹ் இருக்க மாட்டான்

6) அல்லாஹ்வ தொழுதா ஆகிறமெல்லாம் சொர்க்கம் தான்

முஸ்லிம்கள் மத்தியில் பரவலாக பயன்படுத்தப்படும் பழமொழிகளில் அல்லாஹ் என்ற பதம் தவிர்க்க முடியாததாகும். கடவுள் நம்பிக்கை கொண்ட ஒரு மனிதன் தனது உணர்ச்சியின் உச்சத்தில், உதிர்க்கும் பேச்சில் இறைவனை இடையிடையே இரந்து பேசுதல் இயல்பானதாகும். இந்த அடிப்படையில் ”அல்லாஹ்” என்ற இறைவனைச் சுட்டும் அறபு வாசகம் பல பரிமாணங்களில் முஸ்லிம்களின் வாழ்வியல் நடைமுறையில் பயன்படுத்தப்படுவதை அறியமுடிகிறது.

அல்லாஹ் என்ற அறேபிய வாசகமானது, வணக்கத்துக்கு தகுதியான எல்லாம் வல்ல இறைவன்” என்ற கருத்தை சுமந்த ஒரு விசேட வாசகமாகும். அறேபிய மொழியில் கூட இந்த வாசகமானது, அதன் இலக்கண விதிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்பது ஈன்று குறிப்பிடத்தக்கதாகும் இவ்வாசகம் முஸ்லிம்களுக்கே உரித்தான, தனித்துவமான சொல்லாகும்.

கவிஞர் எஸ்.முத்துமீரான் அவரது படைப்பான “இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள்” எனும் தனது நூலில் முஸ்லிம்களிடையே பரவி, விரவிக் காணப்பட்ட பழமொழிகளின் வாசம் மாறாமல், அவற்றின் அமைப்பில் அணுவும் பிசகாமல் தொகுத்தளித்துள்ளமையால், இவற்றில் அறபுமொழியின் செல்வாக்கு பரந்த அளவில் காணப்படும பாங்கினை வெளிக்கொணர்தலே ஆய்வாளரின் பிரதான இலக்காகும்.

### *1.2 மொழி*

பொதுவாக, மொழியானது மனித சமூகத்தின் இன்றியமையாத இலக்கிய ஆக்கக் கூறாகும். மொழி சமூக உறுப்பினர்களிடையே தகவல் தொடர்புக்கான ஒரு வழியாகும். ஒரு குழுவின் தனித்தன்மைக்கு தொடர்புடைய மரபுகளையும், விழுமியங்களையும் வெளிப்படுத்தும் கருவியாகும். மொழி பண்பாட்டின் ஒரு கூறாகும். மனிதனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்தும் சிறப்பம்சம் மொழித்திறன் ஆகும். சமுதாய பண்பாட்டு உயர்ந்த நிலையை எட்டுவதற்கு மொழியே காரணமாகும்.

இதனை பேராசிரியர் பாலகிருஷ்ணன் விபரிக்கையில்: "நமது சிந்தனை, கனவு, பிரார்த்தனை, தியானம், பிறரோடு உள்ள உறவுகள், தகவல் தொடர்பு என அனைத்திலும் மொழி இடம்பெறுகின்றது. மனிதர்களுக்கு இடையேயான தகவல் தொடர்பில் மொழியே சிறப்பிடம் பெறுகிறது. மனித தகவல் தொடர்பில் அபிநயங்கள், தலையசைத்தல், கண்சிமிட்டல், பிரெயில் எழுத்துக்கள், மோர்ஸ் குறியீட்டு முறை, நடித்துக் காட்டுதல் மற்றும் உடலசைவுகள் மூலம் கருத்தை வெளிப்படுத்தல் போன்ற வேறு பல வழிமுறைகள் இருந்த போதிலும், அவற்றின் தாக்கம் மிகக் குறைவு என்பதோடு, அவையும் கூட மொழியை சார்ந்தே அமைந்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மொழியே மனிதனின் சிந்தனைக்கு வடிவம் கொடுத்து அவனது அனைத்து செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தி வழிநடத்துகின்றது. பாடப்பொருள் மற்றும் உயிர்ப்பொருள் பண்பாட்டை ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்கு கடத்துவதற்கான சாதனமாக மொழியே விளங்குகிறது. மொழி மனிதனின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் மூன்றினையும் ஒருங்கிணைக்கும் வல்லமை பெற்று விளங்குகிறது. மனிதர்கள் வாழும் இடங்களில் எல்லாம் மொழி வியாபித்துக் காணப்படுகின்றது." (பாலகிருஷ்ணன், 2021, பக்: 2)

### *1.3 அறபு மொழியும், முஸ்லிம்களும்*

வெகுஜன இலக்கிய மொழிகளுள் அறபு மொழியானது சிறந்த இடத்தினை முஸ்லிம்களிடத்தில் பெற்றுள்ளது. இஸ்லாமிய மூலாதாரங்களும், வணக்க வழிபாடுகளும் அதனுடன் இணைந்ததாக உள்ளமையே இதற்குக் காரணமாகும். "அறபு மொழியானது இஸ்லாத்தினதும் முஸ்லிம்களினதும் மொழியாகும். அறபு மொழியை பழக்கப்படுத்திக் கொள்வது அறிவு, பண்பாடு, சமயம் ஆகியவற்றில் தெளிவானதும் பலமானதுமான செல்வாக்கைச் செலுத்துகின்றது. இது இஸ்லாமிய சமுதாயத்தின் முன்னோர்களான சஹாபாக்கள், தாபியீன்களுக்கு ஒப்பாகுமளவு செல்வாக்கினைச் செலுத்துகின்றது. அந்த முன்னோர்களான நல்லோர்களுக்கு ஒப்பாகுவது அறிவு, சமயம், பண்பாட்டினை அதிகரிக்கச் செய்கின்றது. ஏனெனில் அறபு மொழியின் ஆன்மா இஸ்லாத்தில் உள்ளது. அல்-குர்ஆன் மற்றும் சுன்னாவை புரிந்து கொள்வது கடமை என்பதனால், அறபு மொழியை கற்றறிவதும் கடமையாகும்." (Mohideen, 2019, p:10)

உலக இஸ்லாமிய சமூகத்தின் ஒரு அங்கமான இலங்கை முஸ்லிம்களுக்கான உறவு தொன்மையான வரலாற்றினைக் கொண்டுள்ளது. "இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்கள், தமது சமயக் கடமையை நிறைவேற்ற அறபு மொழி கற்பது, அவசியமாகக் கருதப்பட்ட வேளையில் தான், அறபு மொழியையும் இஸ்லாமிய வழியையும் கற்பிப்பதற்காக பக்தாதில் ஆட்சி செய்த அப்பாசியக் கலீபா, கி.பி. 940இல் காலித் பின் அபீ பக்காயா என்ற சமயப் போதகரை இலங்கைக்கு அனுப்பி வைத்ததாகவும், இலங்கையில் இவர் தனது பணியை செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருந்த போதுதான், கி.பி. 959இல் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். அவரது சிறப்பையும் திறமையையும் பற்றி கலீபா அனுப்பிய பட்டயக் குறிப்பொன்று அவரின் அடக்கஸ்தலத்தில் நாட்டப்பட்டிருந்தது. இப்பதிவேடு இன்னும் லண்டன் தொல்பொருட் காட்சிசாலையில் காணப்படுகின்து." (Shukri,1986, pp:340-341)

இக்கருத்திற்கிணங்க, "இஸ்லாமிய சமயத்தையும், அறபு மொழியையும் கற்பதற்கான ஆவல், இஸ்லாத்தின் ஆரம்பக் காலங்களிலேயே, இலங்கை முஸ்லிம்களிடத்தில் இருந்துள்ளது என்பதும், இதற்கு அக்கால கலீபாக்கள் கூட பூரண ஆதரவு வழங்கி வந்துள்ளார்கள் என்பதும் தெளிவாகின்றது." *(ஜலால்தீன், 2017, பக்: 119)*

தந்தை வழியுறவாக அறபு மொழியைக் கொண்ட இலங்கை முஸ்லிம்கள் தமது தாய்வழி மொழியையே பேச்சு மொழியாகக் கொண்டிருக்கின்றனர். தமிழ் மொழியை வளர்க்கவும் பாடுபட்டனர். "தமிழிலக்கிய வளர்ச்சிக்கு, சீறா தந்த உயர் தனிப்பாவலர் உமறுப் புலவர் உட்பட பல முஸ்லிம் அறிஞர்களும், கவிஞர்களும், எழுத்தாளர்களும் செய்துள்ள தொண்டினைத் தமிழிலக்கியப்பரப்பு மறந்ததோ, மறுத்ததோ கிடையாது, மதவேறுபாடுகளைக் கடந்த ஒற்றுமையை நிலைநாட்டும் தனிச் சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு. தமிழிலக்கிய வரலாற்றினை அறிந்தோர் இதனை அறிவர்." *(செந்தில்நாதன், 1964, பக்: 138)*

### 1.4 தமிழ்மொழியும், முஸ்லிம்களும்

முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்களின் வரலாற்றின் அடிப்படையில், அவர்களின் மூதாதையரின் சமய, கலாசார மூலமொழியாக அறபு இருந்தபோதும், அவர்களின் பிரதேச ரீதியான மொழிகள் அவர்களது வாழ்விலும், பண்பாட்டிலும் வெகுவாக செல்வாக்குச் செலுத்தியுள்ளன. பல்லின சமூகங்களைக் கொண்ட நாடான இலங்கையில், பெரும்பான்மை முஸ்லிம்கள் தமது தாய்மொழியாக தமிழையே கொண்டுள்ளமை ஈன்று குறிப்பிடத்தக்க அம்சமாகும். இலங்கையின் சிங்கள பிரதேசத்தில் வசித்துவரும் முஸ்லிம்களும், சிங்கள மொழியினால் தாக்கமடைந்திருந்த போதும் தமிழையே தாய்மொழியாக கொண்டுள்ளனர்.

இதனை அரசியல் துறைப் பேராசிரியர் பாஸில் இவ்வாறு விவரிக்கிறார், முஸ்லிம்கள் தமது அரசியல், சமூக, பொருளாதார, அரசியல், மொழி சார்ந்த அம்சங்களில் தனித்துவத்தன்மையுடன் வாழ்கின்றனர். குறிப்பாக, கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தனித்துவப் பண்புகளுடன் தமது வாழ்வியல் கூறுகளைக் கொண்டுள்ளமை குறிப்படத்தக்கது. "இலங்கை முஸ்லிம்கள் தமிழ் மொழியினை தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். எனினும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் முஸ்லிம்கள், சிங்கள மொழியினையும் தமது அன்றாட கருமங்களில் பயன்படுத்தும் வழக்கத்தினைக் கொண்டுள்ளனர். வர்த்தகம், விவசாயம், மீன்பிடி போன்றவற்றை தமது பிரதான ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள முஸ்லிம்கள், அரசியல், பொருளாதார, மத, கலாசார ரீதியாக தனித்துவமான ஒரு சமூகத்தவராக வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை முஸ்லிம்கள் சமய அடிப்படையில் இஸ்லாத்தினை பின்பற்றுகின்றபோதிலும், வாழ்வியல் நடத்தைக் கோலங்களில் கிழக்கு முஸ்லிம்களுக்கும் ஏனைய பிரதேசங்களில் வாழுகின்ற முஸ்லிம்களுக்குமிடையே சில வேறுபாடுகள் இருக்கின்றன. மிக நீண்டகாலமாக கிழக்கு முஸ்லிம்கள் தமிழர் கலாசாரத்துடன் இரண்டறக் கலந்த அனுபவத்தினைக் கொண்டிருக்க, ஏனைய பிரதேசங்களில் உள்ள முஸ்லிம்களோ சிங்கள பௌத்த சமூகத்துடன் அதிக பிணைப்பினைக் கொண்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர். சமூக, கலாசார ரீதியிலான இவ்வகை வேறுபடுத்தல் முஸ்லிம் அரசியலிலும் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது." *(பாஸில் & பௌஸர், 2019, பக்: 2)*

இந்தத் தனித்துவத்தின் தாக்கமே கிழக்கு முஸ்லிம்களிடையே தனித்துவமாகத் தோன்றி வளர்ந்த பழமொழிகளாகும். இப்பழமொழிகளில் "அறபுத்தமிழ்" மரபினையும்

அவதானிக்க முடிகிறது. அறபுத்தமிழை எ.எம்.எ. அஸீஸ் (1963) இவ்வாறு அறிமுகம் செய்கின்றார்: ''இலங்கை முஸ்லிம்களில் பெரும்பாலோர் தமிழையே பேசுகின்றனர். ஆனால், இலங்கை முஸ்லிம்கள் பேச்சு வழக்கிலும், தென்னிந்திய முஸ்லிம்கள் பேச்சு வழக்கிலும் பல அறபுச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுக்கான தமிழ்ச் சொற்களிலிருந்தும் அவ்வறபுச் சொற்களே கையாளப்படுவது கவனித்தற் பாலது. எனவே, முஸ்லிம்களது தமிழ் வழக்கினைக் குறிப்பதற்கு அறபுத்தமிழ் என்ற தொடர் கையாளப்பட்டு வருகின்றது. முன்னர் அறபுத்தமிழை அறபிலேயே எழுதினர். அறபு மொழியில் இல்லாத ட, ச, ங, ப தமிழ் ஒலிகளை குறிப்பதற்கு, அறபு எழுத்துக்களோடு விசேஷ புள்ளிகளை சேர்த்து எழுதுவர். இக் காலத்தில் அறபுத் தமிழ் அதிகமாக தமிழிலேயே எழுதப்படுகின்றது.'' (அஸீஸ், 1963, பக்: 41)

இவ்வறபுத் தமிழ் மரபானது கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பழமொழி இலக்கியத்திலும் பாதிப்புச் செலுத்துகின்றது. கிழக்கிழங்கை முஸ்லிம்களின் பாரம்பரிய தமிழ் பழமொழி இலக்கியத்தின் கூறுகளில் ஒன்றாகும். இவை முஸ்லிம்களின் அனுபவத்தின் வாயிலாகத் தோன்றியன. இவை, முஸ்லிம்களின் கருத்துக்களாக ஒலிப்பவை. ''ஒவ்வொரு மொழியிலும் பழமொழிகளுண்டு. அநுபவத்தின் மூலம் பெற்ற மிகுதியான அறிவை அப்பழமொழிகள் சில சொற்களில் அமைத்துத் தந்துள்ளன. திராவிட மொழிகளில் பழமொழிகள் தழைத்தோங்கியுள்ளன. இவை தமிழிலும் மலையாளத்திலும் முறையே 'பழமொழி' என்றும் 'பழஞ்சொல்' என்றும் வழங்குகின்றன. தெலுங்கு, கன்னட மொழிகளில் இவற்றிற்குத் தனிப் பெயர்கள் முறையே 'நாநுடி', நாண்ணுடி' என்பனவாகும். இச்சொற்களுக்கு 'மக்கள் குரல்' என்று பொருள்.'' (சேதுப்பிள்ளை, நாயர், மரியப்பபட் & வெங்கட்ராவ், 1962)

### 1.5 கவிஞர் முத்துமீரான்

முஸ்லிம்களின் பழமொழிகளை கவிஞர் எஸ். முத்துமீரான் தனது ''இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள்'' எனும் நூலில் கொண்டு வந்துள்ளார். இந்நூல், சென்னை நேஷனல் பப்ளிஷர்ஸ் எனும் பதிப்பகத்தால் 2005இல் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. 208 பக்கங்களைக் கொண்டுள்ள நூல், ஆறு பின்னிணைப்புக்களைக் கொண்டுள்ளது. இலங்கையின் கிழக்கு மாகாணம் நிந்தவூரைச் சேர்ந்தவர் கவிஞர் எஸ். முத்துமீரான். இவர் ஒரு பிரபல வழக்கறிஞராவார். சிறுகதை, நாடகம், கவிதை போன்ற பல்வேறு இலக்கிய ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இலக்கிய வேந்தர், இலக்கிய திலகம், கலாபூஷணம், தமிழ்மாமணி, கவிக்குயில், போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார். கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கிராமியக் கவியமுதம், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள், இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள், இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்கள், இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் வாய் மொழிக் கதைகள், கிழக்கிலங்கை கிராமத்து முஸ்லிம்களின் பூர்வீகமும் – வாழ்வும் வாழ்வாதாரங்களும் போன்றன அவரது முக்கிய நூல்களாகும். இவற்றுடன் மூன்று சிறுகதைத் தொகுதிகளையும், மூன்று கவிதைத் தொகுதிகளையும், இரண்டு உருவகக் கதைத் தொகுதிகளையும், ஒரு நாடகத் தொகுதியையும் வெளியிட்டுள்ளார். நாட்டுப்புறவியல் துறையில் இவர் காட்டும் அளப்பரிய ஆர்வம் மண்ணின் மீதும் மக்கள் மீதும் இவர் கொண்டுள்ள கரிசனையைக் காட்டுகின்றனது.

### ஆய்வு நோக்கம்

இவ்வாய்வு வெளிப்படுத்தும் பிரச்சினைகளுக்கான தீர்வினைக் கண்டறியும் வகையில் பின்வரும் நோக்கங்களைக் கொண்டுள்ளது:

- இலங்கை முஸ்லிம்களின் மொழி வழக்கில் அறபு மொழி செல்வாக்குச் செலுத்த ஏதுவாகிய காரணிகளை கண்டறிதல்.
- இலங்கை முஸ்லிம்களிடையே காணப்படும் பழமொழிகளை வெளிக்கொணர்தல்.
- முஸ்லிம்களின் பழமொழிகளில் காணப்படும் அறபு மொழிச் சொற்களை வெளிப்படுத்தி, அதன் கருத்துக்களை இஸ்லாமிய, அறபு இலக்கிய மூலாதாரங்களுடன் ஒப்பிட்டு நோக்கல்.

## 2. ஆய்வு முறையியல்

ஆய்வுப் பிரச்சினைகளைத் தீர்த்து ஆய்வு நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக விவரண மற்றும் பகுப்பாய்வியல் முறைகள் பயன்படுத்தப்பட்டன. முதலாம் நிலைத்தரவுகளுடன் இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைள், மற்றும் இணையம் போன்றவற்றின் மூலம் தரவுகள் பெறப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

## 3. பழமொழி மாதிரிகளும், கலந்துரையாடலும்

இவ்வாய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட கவிஞர் எஸ். முத்துமீரானின் ''இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள்'' எனும் நூலில் ஆய்வாளரினால் அட்டவணைப்படுத்தி அறியப்பட்ட சுமார் முப்பது பழமொழிகளில் அறபு மொழிச் சொற்கள் உள்ளன. குறித்த சொற்கள் நேரடியாகவும், தமிழுக்கு மருவியும் பயன்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இச்சொற்கள் முழுமையாக மூலக்கருத்தையே பிரதிபலிக்கின்றன. ஆய்வாளர், குறித்த சொற்கள், அறபு இலக்கிய மூலாதாரங்களில் பயன்படுத்தியுள்ள பாங்கினை இப்பழமொழிகளுடன் ஒப்பிட்டு விளக்குகின்றார். இதற்காக எளிய எழுமாற்று மாதிரியெடுப்பு முறையைப் பயன்படுத்தி 05பழமொழிகளை ஆய்வுக்காக எடுத்துள்ளார். பின்வரும் மாதிரிகள் மூலம் அதனை புரிந்து கொள்ள முடிகின்றது:

### 3.1 மாதிரி - 1

தமிழில் பாவனையில் உள்ள சொல் : ஆபத்து

| பழமொழி | அறபு இலக்கியம் |
|---|---|
| அன்பான மனிசர ஆபத்தில் அறியலாம்[1] | அறிவின் **ஆபத்து** மறதி[2] |

[1]முத்துமீரான், 2005, பக்: 53

[2]இப்னு மஸ்ஊத் (ரழி), https://www.alukah.net/sharia/0/109826/

மாதிரி (1)இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி, பழமொழியில் அறபுச் சொற்கள் நேரடிக் கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள 'ஆபத்து' என்ற சொல் அறபியிலும் தமிழிலும் ஒரே ஒலியன்களைக் கொண்டுள்ளன. எனவே இச்சொல்லானது அறபியிலும், தமிழிலும் அபாயம் என்னும் பொருளில் வழங்கப்படுகிறது.

### 3.2 மாதிரி - 2

தமிழுக்கு மொழிபெயர்க்க முடியாத சொல் : கிப்லா

| பழமொழி | அறபு இலக்கியம் |
|---|---|
| தொழாதவண்ட கிப்லா எல்லாப் பக்கமும்[1] | (நபியே!) நாம் உம் முகம் அடிக்கடி வானத்தை நோக்கக் காண்கிறோம் எனவே |

| | |
|---|---|
| | நீர் விரும்பும் **கிப்லாவின்** பக்கம் உம்மைத் திடமாக திருப்பி விடுகிறோம், ஆகவே நீர் இப்பொழுது (மக்காவின்) மஸ்ஜிதுல் ஹராம் பக்கம் உம் முகத்தைத் திருப்பிக் கொள்ளும். (முஸ்லிம்களே!) இன்னும் நீங்கள் எங்கிருந்தாலும் (தொழுகையின் போது) உங்கள் முகங்களை அந்த **(கிப்லாவின்)** பக்கமே திருப்பிக் கொள்ளுங்கள்[2] |

[1]முத்துமீரான், 2005, பக்: 35 [2]அல்-குர்ஆன் 2:144

முஸ்லிம்களின் தனித்துவமான மாதிரி (2)இல் வரும் ‘‘கிப்லா” எனும் அறபுப் பதமானது முஸ்லிம்கள் தொழும் போது முன்னோக்கும் கஅபாவின் திசையைக் குறிக்கும். தொழுகை முஸ்லிம்களின் உயிர்நாடி எனலாம். இதனையே இப்பழமொழி வலியுறுத்துகின்றது. முஸ்லிம்கள் தொழும்போது இறையில்லாமாகிய புனித கஅபாவை முன்னோக்குவது கடமையாகும். இக்கஅபா எனும் கண்ணியமிக்க புனித இறையில்லம் சவூதி அரேபியாவில் உள்ள மக்கா நகரில் அமைந்துள்ளது. இஸ்லாமியர்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் இறைவனைத் தொழும்போது கஅபாவை முன்னோக்கி நின்றுதான் தொழுவார்கள். இம்முன்னோக்குதலையே ‘‘கிப்லாவை முன்னோக்குதல் எனப்படும். இந்த கிப்லா எனும் சொல்லை தமிழுக்கோ வேறுமொழிக்கோ பெயர்க்க முடியாது. இது ஒரு குறிப்புப் பெயர்ச்சொல். அதேவேளை அறபியில் முன்னோக்குதல் எனும் அர்த்தத்தைக் கருகின்ற போதிலும் நேரடியாக மொழிபெயர்க்க தமிழில் பொருத்தமான சொல் இல்லை. எனவே தான், வட்டாரியல் மரபில் இது கிப்லா என்றே பயன்படுத்தப்படுகின்றது.

***3.3 மாதிரி - 3***

தமிழுக்கு மொழிபெயர்க்கத்தக்க சொல் : ஆகிரா (மறுமை)

| **பழமொழி** | **அறபு இலக்கியம்** |
|---|---|
| அல்லாஹ்வ தொழுதா ஆகிரமெல்லாம் சொர்க்கம் தான்[1] | (இறைவனிடத்தில் உள்ள) **மறுமையின்** வீடு இறைபக்தி உடையோருக்கு சிறந்ததாகும்.[2] |

[1]முத்துமீரான், 2005, பக்: 55 [2]அல்-குர்ஆன் 7:169

மாதிரி (3)இல் வரும் பழமொழி கொண்டுள்ள ஆகிறம் எனும் அறபுப் பதம் ஆகிரா என்ற சொல்லின் மருவிய வடிவமாகும். இச்சொல் மருவாதிருந்தாலும், மறுமை எனும் அர்த்தத்தைத் தரும். பொதுவாக, இப்பழமொழியிலும், இங்கு எடுத்துக் காட்டப்பட்ட அல்குர்ஆன் வசனத்திலும் ஆகிறா எனும் பதம் மறுமையையே சுட்டுகிறது. ‘‘கிராமத்து முஸ்லிம்கள் தங்களது பேச்சு வழக்கில் பல்வேறுபட்ட அறபுச் சொற்களை கலந்து பேசுவார்கள். இது அவர்களின் மரபுவழி வந்த பழக்கம் எனலாம். இப்பழமொழி தொழுகையின் சிறப்பை மிகத் தெளிவாகக் கூறி, கிராமத்து முஸ்லிம்களின் சமய நம்பிக்கையையும் அவர்களின் ஒழுக்கத்தையும் தெளிவுறுத்துகிறது.’’ (முத்துமீரான், 2005)

***3.4 மாதிரி - 4***

இரு சொற்களை பாவித்தல் : மௌத் மற்றும் மஹ்ஷர்

| **பழமொழி** | **அறபு இலக்கியம்** |
|---|---|
| மவுத்த நம்பாதவனுக்கு மஹிசரைப் பத்தி கவலையேன்[1] | ***மௌத்:*** ஒவ்வொரு ஆத்மாவும் **மரணத்தை** சுகிக்கக் கூடியதே.[2] |

| | |
|---|---|
| | **மஹ்ஷர்:**வேதத்தை உடையோரில் எவர்கள் நிராகரித்துக் கொண்டிருந்தனரோ, அவர்களை அவர்களுடைய வீடுகளிலிருந்து முதல் **வெளியேற்றத்தில் வெளியேற்றியவன்** அவனே.[3] |

[1]முத்துமீரான், 2005, பக்: 59 [2]அல்-குர்ஆன் 3:185 [3]அல்-குர்ஆன் 59:2

மாதிரி (4)இன் படி, பழமொழியில் இரண்டு அறபுச் சொற்கள் பாவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இடம்பெற்றுள்ள மவுத்து, மஹிசர் ஆகிய அறபிச் சொற்கள், முறையே மரணத்தையும், இறைவன் இறந்தவர்களுக்கு உயிர் கொடுத்து எழுப்பி, அவர்களிடம் கேள்வி கணக்குகள் கேட்பதற்காக எல்லோரையும் ஒன்றுகூடச் செய்யும் இடத்தையும் குறிக்கும். இப்பழமொழி முஸ்லிம்களிடையே பேசப்படும் அவர்களின் தனித்துவமான பழமொழிகளில் ஒன்றாகும். (முத்துமீரான், 2005, பக்: 60) பெரும்பாலும் இவை ஒரே நிகழ்வுடன் தொடர்புபட்டதாக உள்ளதால், ஒரே பழமொழியில் ஏக காலத்தில் பயன்படுத்தப்படுகின்றது. பழமொழிகளில் இரு அறபுச் சொற்களை பாவித்தலுக்கு இது நல்லதொரு உதாரணமாகும்

### *3.5 மாதிரி - 5*

மறைமுகக் கருத்தில் பயன்படுத்தல் : சுன்னத்

| **பழமொழி** | **அறபு இலக்கியம்** |
|---|---|
| உள்ளதும் ஒரு புள்ளயெண்டு ஒன்பது தரம் சின்னத்து வெச்சானாம்[1] | அல்லாஹ் ஏற்படுத்திய **வழி** - இதற்கு முன் சென்றவர்களுக்கும் இதுவே தான் அல்லாஹ்வின் (அவ்)**வழியில்** எவ்வித மாற்றத்தையும் நீர் காணமாட்டீர்.[2] |

[1]முத்துமீரான், 2005, பக்: 69 [2]அல்-குர்ஆன் 59:2

சுன்னத் என்பது நபிவழி எனும் கருத்தில் கையாளப்படும். இதனை சுன்னா என்றும் அழைப்பர். சுன்னா என்ற சொல் பொதுவான கருத்தோட்டத்தைக் கொண்டுள்ளது. ''அல்-குர்ஆனின் போதனைகளைச் செயற்படுத்துகின்ற போதும், அதன் உயரிய நோக்கங்களுக்கேற்ப மக்களை வழிநடாத்திச் செல்கின்ற போதும் நபி (ஸல்) அவர்கள் கடைப்பிடித்த வழிமுறைகளே சுன்னா என்ற சொல்லால் கருதப்படுகின்றது.'' (முகம்மது அக்ரம், 2017, பக்: 80) ஆனால், மாதிரி (5)இல் உள்ள சுன்னத் என்ற சொல் முஸ்லிம்களிடையே வழக்கத்திலுள்ள விருத்தசேதனத்தை (**Circumcision**) குறிக்கிறது. இஸ்லாமிய கண்ணோட்டத்தில் விருத்த சேதனம் இறையருளைப் பெறும் வணக்கமாகும். இது சுன்னா எனும் நபிவழியில் உள்ளதாகும். மொழியின் நாகரிகம் கருதி இச்செயல் சுன்னத் என வழங்கப்பட்டிருக்கலாம்.

### *3. முடிவுரை*

இலங்கை முஸ்லிம்களிடையே பல்வேறு பழமொழிகள் உள்ளன. அவை முஸ்லிம்களின் தனித்துவத்துடன் தொடர்புடைய வட்டாரியல் இலக்கியமாக அமைந்துள்ளது. அறபு மொழியுடன் சமய, கல்வி, பொருளாதார, இராஜதந்திர ரீதியான நெருங்கிய தொடர்பினை இலங்கை முஸ்லிம்கள் கொண்டிருந்தமையால் அதன் தாக்கம் இந்த பழமொழிகளிலும் காணப்படுகின்றது. இத்தகைய பழமொழிகளை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கவிஞர் எஸ். முத்துமீரான் தனியாக ''இலங்கை கிராமத்து முஸ்லிம்களின்

பழமொழிகள்'' எனும் பெயரில் தொகுத்துள்ளார். இந்நூலில் சுமார் முப்பது பழமொழிகளில் துல்லியமான அறபு மொழிச் சொற்கள் காணப்படுகின்றன. இவற்றை பல்வேறு வகைகளுக்குள் உள்ளடக்க முடியும். தமிழில் பாவனையில் உள்ள சொற்கள், தமிழுக்கு மொழிபெயர்க்க முடியாத சொற்கள், தமிழுக்கு மொழிபெயர்க்கத்தக்க சொற்கள், மறைமுக கருத்தில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் என வகைப்படுத்தலாம். அத்துடன், சில பழமொழிகளில் இரு அறபுச் சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அறபுத்தமிழ் இலக்கியத்தின் மிகப் பலமானதொரு வடிவம் என்ற வகையில் இது தொடர்பான பரந்த ஆய்வுடன் கூடிய விழிப்புணர்வினை அறபு மொழி கற்பிக்கும் நிறுவனங்கள், கல்விக் கூடங்கள் எதிர்காலத்தில் மாணவர் மத்தியில் ஏற்படுத்தி திறனாய்வினை வலுவூட்டும் கலைத் திட்டங்களை உருவாக்க வேண்டும் என்றும் இது தொடர்பான வழிகாட்டல் மற்றும் பயிற்சிகளை வழங்க வேண்டுமென்றும் இவ்வாய்வு பிரேரிக்கின்றது.

## 4. உசாத்துணை

அல்-குர்ஆன்

முகம்மது அக்ரம், (2017) *நாளைய நாகரிகம், பகுதி - 1,* கொழும்பு: இஸ்லாமிக் புக் ஹவுஸ்.

அஸீஸ், எ.எம்.எ., (1963). *இலங்கையில் இஸ்லாம், (மறுபதிப்பு: 2007),* கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

செந்தில்நாதன், கனக, (1964). *ஈழத்து இலக்கிய வளர்ச்சி*, கொழும்பு: அரசு வெளியீடு.

சேதுப்பிள்ளை, ரா.பி, நாயர், எஸ்.கே, மரியப்பபட், எம்,& வெங்கட்ராவ்,என், (1962). *தென்மொழிகளில் பழமொழிகள்*, சென்னை: சாம்ராஜ் பிரசுரம்.

முத்துமீரான், எஸ், (2005). *இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள்*, சென்னை: நெஷனல் பப்ளிஷர்ஸ்.

பலகிருஷ்ணன், வை, (2021),''மொழியும் சமூகமும்'',*கலைத்திட்டத்தில் மொழி - இளங்கலை கல்வியியல் கையேடு,* சென்னை: தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம். (ஒன்லைன்) Accessed on 10.09.2021:http://www.tnteu.ac.in/pdf/language%20tamil.pdf.

பாஸில், எம்.எம். & பௌஸர், எம்.ஏ.எம்., (2019),''ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்: சமகாலத் தொய்வுகளும் அவசியமான சீர்திருத்தங்களும்'',*கலம் - பான்னாட்டு ஆய்விதழ் 12 (1), 2019,* ஒலுவில்: தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

ஜலால்தீன், எம்.எஸ்.எம்., (2017). *இலங்கை முஸ்லிம் கல்வி வரலாறு*, மருதமுனை: கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவை.

Mohideen, H.L.M, (2019). *The Methodology of Teaching Arabic Language To Non-Native Speakers in Sri Lanka with Special Reference to Jaamiathul Falah Arabic College,* M.Phil dissertation submitted to Jamal Mohamed College, Tiruchirappalli

Shukri, M.A.M., (1986). “Muslims of Sri Lanka - A Cultural Perspective”, Muslims of Sri Lanka, Beruwala: Jamiah Naleemia Inst.

Slāḥ nǧyb āldq, (2016). “آfāt ṭlb ālʿlm”, Alukah in Enlish, (Online), Accessed on 10.09.2021: https://www.alukah.net/sharia/0/109826/